வடக்கு.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 28/2022

எனது இல:NP/07/10/02/205
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
2022.11.09.

பிரதிப் பிரதம செயலாளர்,
பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் சேவையின் தரம் III வகுப்பு 3 பதவியில் உள்ள அலுவலர்களுக்கான 1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2020 (II) 2023**

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டதும் 2013.01.01ம் திகதியிலிருந்து செயல்வலுவில் உள்ளதுமான வடக்கு மாகாண பொதுச்சேவையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையிலுள்ளவர்களுக்கான சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றில் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் சேவையின் தரம் III வகுப்பு 3 ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அவர்களால் **2023 ஆம் ஆண்டு** நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2.0 **தகைமைகள் :**

வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் சேவையின் தரம் III வகுப்பு 3 இலுள்ள அலுவலர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறுவர்.

3.0 **விண்ணப்ப படிவம்**

3.1 விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படவேண்டிய இறுதித் திகதி **2022.11.30** ஆகும்.

3.2 விண்ணப்பமானது இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

3.3 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தலைப்பிலுள்ளவாறு பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்திராத விண்ணப்பங்களும் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும்.

4.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:-** பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ii) செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச்சீட்டு (Passport)

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் (Driving License)

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

5.0 ***விண்ணப்பங்கள் :-***

5.1 இல 1 முதல் 6 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான தாளில் விண்ணப்பமானது கணினியில் தயார் செய்யப்பட்டு பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.

5.2. விண்ணப்பப்படிவமானது இத்துடன் உள்ள மாதிரிப்படிவத்திற்கமைவாக தயார் செய்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் முன்னோட்டப் பிரதி என்பன அனுப்பிவைத்தலாகாது என அறிவுறுத்தப்படுகிறது.

5.3 மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும்.

5.4 தரப்பட்டுள்ள பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தமது விண்ணப்பப்படிவம் இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

6.0 **பரீட்சைக் கட்டணம்:-**

6.1 முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

6.2 ஏனைய பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா **250** ஐயும், ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களுக்குத் தோற்றுவதாயின் ரூபா **500** ஐயும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகமொன்றிலும் செலுத்தி காசுக்கட்டளையினை **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்”** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு செலுத்துதல் வேண்டும்.

6.3 விண்ணப்பதாரி காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

7.0 ***அனுமதி அட்டை :***

விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர் அது பற்றி பின்வரும் விபரங்களுடன் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,
- பணம் செலுத்தியிருப்பின் காசுக்கட்டளையின் உறுதிப்படுத்திய பிரதி,
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கம் (Fax No),

8.0 இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்களால் தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XIIன் பிரிவு 19ற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

9.0 உத்தியோத்தர்கள் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10.0 பரீட்சைக்கு தோற்றியுள்ள சகல பரீட்சார்த்திகளுக்குரிய பெறுபேறுகளும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

11.0 பாடத்திட்டம் :-

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. தாபன விதிக்கோவை<br>பாட இல : 01<br>நேரம் : 01 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | 1817/30 இலக்க 03.07.2013ம் திகதிய விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை மற்றும் தாபன விதிக்கோவை தொடர்பிலான அறிவினைப் பரீட்சித்தல் |
| **1. Establishment Code**<br>**Sub No :- 01**<br>**Time :- 01 Hour**<br>**Total Marks :- 100** | It is expected to test basic knowledge and understanding of the candidate on regulations of Establishments Code and Procedural rules of the Provincial Public Service Commission published in the Gazette extra ordinary no 1817/30 dated 03.07.2013 |
| 2. நிதி ஒழுங்கு விதிகள்<br>பாட இல : 02<br>நேரம் : 01 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | அரசநிதி ஒழுங்கு விதிகள், அரச அலுவலகங்களில் பேணப்படுகின்ற பலதரப்பட்ட பதிவேடுகள் தொடர்பான அறிவு மற்றும் களஞ்சிய முகாமை தொடர்பான அடிப்படைகள் போண்றவற்றினைப் பரீட்சித்தல். |
| **02. Financial Regulations**<br>**Sub No :- 02**<br>**Time :- 01 Hour**<br>**Total Marks :- 100** | It is expected to test basic knowledge and understanding of the candidate on Government Financial Regulations and the purpose of various registers and log books maintained in public office and basic knowledge of store keeping. |

**12.0 மேலும் வடக்கு மாகாண உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் Exam & Recruitments ⟶ Advertisement எனும் தொடர்பின் ஊடாகத் தாங்கள் பெற்றுக்கொண்டுள்ள இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள்பற்றி தங்கள் அமைச்சின்/ திணைக்களங்களின்/ அலுவலகத்தின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

**கவனிக்கவும் :- இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.**

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

**சி.திருவாகரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வட மாகாணம்.

பிரதி : - பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம், வட மாகாணம் - தகவலுக்காக